# திருவேற்காடு நகராட்சி

## திருவள்ளூர் மாவட்டம்

# நிர்வாக அறிக்கை

# 2023–24

# திருவேற்காடு நகராட்சி

## நிர்வாக அறிக்கை – 2023 - 2024

### அமைப்பும் நிர்வாகமும்

**ஆட்சி எல்லை:**

சமயக்குறவர் நால்வருள் திருஞானசம்பந்தரால் பாடப் பெற்றதும் அகத்திய மாமுனிவருக்கு பாலம்பிகை சமேத வேதபுரீஸ்வரர் திருமண கோலக்காட்சி அளித்ததும், 63 நாயன்மார்களுள் ஒருவரான மூர்க்கநாயனார் அவதரித்ததும் ஆதிசக்தியே உருமாரி வந்து கருமாரியாய் எழுந்தருளி அருளாட்சி செய்து வரும் அறமோங்கும் திருவேற்காட்டில், திருவேற்காடு, சுந்தரசோழபுரம், வீரராகவபுரம், அயனம்பாக்கம், கோலடி, பெருமாளகரம், நூம்பல் ஆகிய 7 கிராம பஞ்சாயத்துகளை ஒன்றாக சேர்த்து அரசு ஆணை எண்.991/79, நாள்.27.06.1979ன் படி திருவேற்காடு பேரூராட்சி உருவாக்கப்பட்டது. இப்பேரூராட்சி அரசு ஆணை எண். 300, நகராட்சிகளின் நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 24.08.2004–ன்படி மூன்றாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது. மேலும் இந்நகராட்சி அரசு ஆணை எண்.154, நகராட்சிகளின் நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 9.08.2010ன் படி தேர்வு நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது. மேலும் இந்நகராட்சி அரசாணை எண்.49 நகராட்சிகளின் நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.15.04.2023–ன்படி சிறப்பு நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு 28.50 சதுர கிலோ மீட்டர் பரப்பில் சிறப்புடன் செயல்பட்டு வருகிறது.

**மக்கள் தொகை:**

இந்நகராட்சி பகுதியில் 2011 ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி 62289 இதில் 31437 பேர் ஆண்கள், 30852 பேர் பெண்கள் ஆவர். 2023–ம் ஆண்டில் குடியிருப்புகளின் எண்ணிக்கை 31554 ஆகவும் மக்கள் தொகை 116216 ஆகவும் உத்தேசமாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**நகராட்சி அலுவலர்கள்:**

**ஆணையர்:**

அறிக்கையாண்டில் 01.04.2023 முதல் 30.04.2023 வரை திரு.H.இரமேஷ் B,L., அவர்கள், 02.05.2023 முதல் 18.12.2023 வரை திரு.A.ஜஹாங்கீர் பாஷா, B.A., அவர்கள் மற்றும் 18.12.2023 முதல் 31.03.2024 வரை திரு.M.கணேசன், B.Sc, M.B.A., அவர்கள் ஆணையராக பொறுப்பேற்று பணிபுரிந்து வருகிறார்.

பொறியாளர்:

அறிக்கையாண்டில் 01.04.2023 முதல் 31.10.2023 வரை திரு.A.P.குமார் அவர்கள் திருவேற்காடு நகராட்சி பொறியாளராக பணியாற்றியுள்ளார். தற்போது Y.சுரேந்திரன் B.E., அவர்கள் நகராட்சி பொறியாளராக பணிபுரிந்து வருகிறார்.

01.04.2023 முதல் கீழ்கண்டவாறு நகர் மன்ற உறுப்பினர்கள் உள்ளனர்.

| வ. எண் | வார்டு உறுப்பினர் பெயர் | வார்டின் விபரம் | கட்சியின் விபரம் |
|---|---|---|---|
| 1. | திரு. ஏ.கிருஷ்ணமூர்த்தி | நகர் மன்ற தலைவர் (ம) வார்டு எண்.8 | திமுக |
| 2. | திரு. ஏ.ஆனந்தி | நகர் மன்ற துணை தலைவர் (ம) வார்டு எண்.14 | காங்கிரஸ் |
| 3. | திருமதி. ரா.சாந்தி | வார்டு எண்: 1 | சுயேட்சை |
| 4. | செல்வி. ஆ. ஆஷா | வார்டு எண்: 02 | சுயேட்சை |
| 5. | திருமதி. கோ. கோமதி | வார்டு எண்: 03 | சுயேட்சை |
| 6. | திரு. பொ. சுதாகர் | வார்டு எண்: 04 | திமுக |
| 7. | திரு. ப. பிரதானம் | வார்டு எண்: 05 | திமுக |
| 8. | திருமதி. தெ. விஜயலட்சுமி | வார்டு எண்: 06 | திமுக |
| 9. | திருமதி.ப. ருக்மணி | வார்டு எண்: 07 | திமுக |
| 10. | திருமதி. ப. நர்மதாகுமாரி | வார்டு எண்: 09 | திமுக |
| 11. | திருமதி.கு. நளினி | வார்டு எண்: 10 (12.03.2024 முதல் தகுதி நீக்கம் செய்யப்பட்டு காலியிடமாக உள்ளது) | திமுக |
| 12. | திரு. தி.வி. இளங்கோவன் | வார்டு எண்: 11 | திமுக |
| 13. | திருமதி. ஜானகி சுடலைமணி | வார்டு எண்: 12 | சுயேட்சை |
| 14. | திருமதி. இ. காஞ்சனா | வார்டு எண்: 13 | சுயேட்சை |
| 15. | திரு. செ. சங்கர் | வார்டு எண்: 15 | திமுக |
| 16. | திருமதி. பி. ஆர்த்தி | வார்டு எண்: 16 | திமுக |
| 17. | திரு. பு. உமாபதி | வார்டு எண்: 17 | திமுக |
| 18. | திரு. ந. விக்னேஸ்வரன் | வார்டு எண்: 18 | சுயேட்சை |

| வ. எண் | குழுவின் விபரம் | கட்சியின் விபரம் |
|---|---|---|
| I | <u>**நியமனக் குழு உறுப்பினர் விபரம்**</u> | |
| | **திருமதி.ப. ருக்மணி**<br>7வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் | திமுக |
| | | |
| II | <u>**ஒப்பந்தக்குழு உறுப்பினர்**</u> | |
| | **திரு. செ. சங்கர்**<br>15வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் | திமுக |
| | | |
| III | <u>**வரி விதிப்பு மேல்முறையீடு குழு உறுப்பினர்கள்**</u> | |
| | **1. திரு. ப. பிரதானம்,**<br>5வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் | திமுக |
| | **2. திருமதி.தெ.விஜயலட்சுமி,**<br>6வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் | திமுக |
| | காலியிடம் | - |
| | **4. திரு.தி.வி.இளங்கோவன்,**<br>11 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் | திமுக |

<u>நிர்வாகம்</u>

திருவேற்காடு நகராட்சி புதிய அலுவலக கட்டிடம் **28.09.2020** முதல் கதவு எண்.1 சிவன் கோயில் தெரு, திருவேற்காடு, சென்னை–600077 முகவரில் செயல்பட்டு வருகிறது. 2022–2023–ம் அறிக்கையாண்டில் அரசாணை (நிலை) எண்.10, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.23.01.2023–ன்படி கீழ்கண்ட பணியிடங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளது :-

| வ.எண். | பணியிடத்தின் பெயர் | பணியிடம் |
|---|---|---|
| 1. | நகராட்சி ஆணையர் (சிறப்பு நிலை) | 1 |
| 2. | மேலாளர் (வகுப்பு –1) | 1 |
| 3. | வருவாய் அலுவலர் (வகுப்பு –1எ) | 1 |
| 4. | கணக்கர் (வகுப்பு – 1எ) | 1 |
| 5. | உதவியாளர் (வகுப்பு – V) | 5 |
| 6. | வருவாய் ஆய்வாளர் (வகுப்பு – V) | 2 |

| | | |
|---|---|---|
| 7. | இளநிலை உதவியாளர்கள் (வகுப்பு – VII) | 10 |
| 8. | சுருக்கெழுத்தர் | 1 |
| 9. | தட்டச்சர் | 4 |
| 10. | கணினி உதவி திட்ட அமைப்பாளர் | 1 |
| 11. | புள்ளிவிவரக் குறிப்பாளர் | 1 |
| 12. | பதிவறை எழுத்தர் | 1 |
| 13. | அலுவலக உதவியாளர் | 4 |
| 14. | வருவாய் உதவியாளர் | 12 |
| 15. | நகராட்சி பொறியாளர் (நிலை –1) | 1 |
| 16. | இளநிலை பொறியாளர் | 3 |
| 17. | பணி மேற்பார்வையாளர் | 3 |
| 18. | படவரைவாளர் (நிலை–3) | 1 |
| 19. | பணி ஆய்வர்கள் | 5 |
| 20. | மோட்டார் பம்பு இயக்குபவர் | 6 |
| 21. | மின் கண்காணிப்பாளர் (நிலை–1) | 1 |
| 22. | மின் பணியாளர் (நிலை–1) | 1 |
| 23. | குழாய் பொருத்துனர் (நிலை–1) | 1 |
| 24. | முதுநிலை நகரமைப்பு அலுவலர் | 1 |
| 25. | நகரமைப்பு ஆய்வாளர் | 3 |
| 26. | நகர நல அலுவலர் | 1 |
| 27. | துப்புரவு அலுவலர் | 1 |
| 28. | துப்புரவு ஆய்வர் | 6 |
| 29. | துப்புரவு பணி மேற்பார்வையாளர் | 10 |
| 30. | ஓட்டுநர்கள் | 3 |
| 31. | துப்புரவு பணியாளர்கள் | 12 |
| 32. | களப்பணி உதவியாளர் | 1 |
| 33. | சமுதாய அமைப்பாளர் (அயலிடைப்பணியாக தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு திட்டத்திற்கு மாற்றம் செய்யப்பட்டனர்) | 1 |
| | | |
| | மொத்தம் | 106 |

கணினி மயமாக்கல் மற்றும் மின்னனு நிர்வாகம்

இந்நகராட்சியில் சொத்துவரி, தொழில்வரி மற்றும் வரியில்லா இனங்கள் ஆகியவை கணினியில் பதியப்பட்டுள்ளது. மேலும் பிறப்பு இறப்பு பதிவுகளும் கணினியில் பதியப்பட்டு பொதுமக்களுக்கு சான்றுகள் நேரிலும் / இணையதளம் மூலமாகவும் வழங்கப்பட்டு வருகிறது. நகராட்சி அலுவலக வளாகத்தில் வரி வசூல் சேவை மையம் செயல்பட்டு வருகிறது. மேலும், பொதுமக்களுக்கு இடையூறு இன்றி சொத்துவரி, தொழில்வரி, இதர இனங்கள் ஆகிய வரியினங்களை செலுத்த https://tnurbanepay.tn.gov.in என்ற இணையதளம் வசதி மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் மூலம் கைபேசி ஆப் (CMA-UTIS) வசதி அறிமுகப்படுத்தப்பட்டு செயல்பாட்டில் உள்ளதால், பொது மக்கள் செலுத்த வேண்டிய வரி இனங்கள் இடையூறின்றி செலுத்தப்பட்டு வருகிறது.

பொறியியல் பணிகள்

நகராட்சி பொறியியல் பிரிவு மூலம் 2023–24ம் அறிக்கையாண்டில் கீழ்கண்ட திட்டப்பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

| வ. எண். | திட்டத்தின் பெயர் | தொகை (ரூ. இலட்சம்) |
|---|---|---|
| 1. | 15வது நிதி குழு ஆணையரகத்தின் மான்ய நிதி 2023–24<br>அ) நகராட்சி பகுதிகளில் உள்ள சாலை பணிகள் மேற்கொள்ளுதல். | அரசு நிதி ரூ. 43.00<br>பொது நிதி ரூ. 0.00<br>மொத்தம் ரூ. 43.00 |
| 2. | நமக்கு நாமே திட்டம் 2023–24<br>அ) நகராட்சி பகுதிகளில் உள்ள சாலை பணிகள் மேற்கொள்ளுதல். | அரசு நிதி ரூ. 13.00<br>Contribuction நிதி ரூ. 6.50<br>மொத்தம் ரூ. 19.50 |
| 3. | நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி (MPLADS Fund) -2023-24<br>அ) நகராட்சி பகுதிகளில் தெரு விளக்கு மற்றும் பயணியர் நிழற்குடை பணிகள் மேற்கொள்ளுதல் | அரசு நிதி ரூ. 29.05<br>பொது நிதி ரூ. 0<br>மொத்தம் ரூ. 29.05 |
| 4 | மாநில பேரிடர் தணிப்பு நிதி (SDMF) 2023–24<br>அ) நகராட்சி பகுதிகளில் உள்ள மழைநீர் வடிகால்வாய் பணிகள் மேற்கொள்ளுதல். | அரசு நிதி ரூ. 1323.00<br>பொது நிதி ரூ. 0<br>மொத்தம் ரூ. 1323.00 |
| 5 | சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி 2023–24<br>அ) நகராட்சி பகுதிகளில் உள்ள சாலை பணிகள் மேற்கொள்ளுதல். | அரசு நிதி ரூ. 25.00<br>பொது நிதி ரூ. 0<br>மொத்தம் ரூ. 25.00 |

## பொது நிதி பணிகள்

| வ. எண் | பணிகளின் விவரம் | 2023 – 2024 | |
|---|---|---|---|
| | | எடுக்கப் பட்டவை | மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) |
| 1 | தார் சாலைகள் | 29 | 389.60 |
| 2 | சிமெண்ட் சாலைகள் | 27 | 332.80 |
| 3 | குடிநீர் பணிகள் | 10 | 94.30 |
| 4 | மழைநீர் வடிகால்வாய் பணிகள் | 2 | 348.00 |
| 5 | இதர பணிகள் | 11 | 75.50 |
| | மொத்தம் | 79 | 1240.20 |

திருவேற்காடு நகராட்சிப் பகுதிகளில், மத்திய/மாநில அரசுகள் நகராட்சி நிர்வாகத் துறை மற்றும் மாவட்ட ஆட்சியர் அவர்களால் அறிவிக்கப்படும் திட்டம் மற்றும் பணிகள் யாவும் மேற்படி அறிக்கையாண்டில் சிறப்பான முறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## பொது சுகாதாரம்

இந்நகராட்சியில் மருத்துவ நகர் நல அலுவலர், பணியிடம் காலியாக உள்ளது. தற்போது 1 துப்புரவு அலுவலர் மற்றும் 2 துப்புரவு ஆய்வாளர்கள் மூலம் சுகாதார பிரிவில் பிரிவு அலுவலராக செயல்பட்டு வருகின்றனர். 10 துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள், 6 நிரந்தர துப்புரவு பணியாளர் மற்றும் ஒப்பந்த அடிப்படையில் 227 தனியார் துப்புரவு பணியாளர்களை கொண்டு பொது சுகாதாரப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

திருவேற்காடு நகராட்சி பகுதியில் சமுதாய கழிப்பிடங்கள் 6, (இருக்கைகள் – 42) பொது கழிப்பிடங்கள்–1 (இருக்கைகள்–12) நகராட்சி மூலம் பராமரிக்கப்பட்டு வரப்படுகிறது. நகராட்சி பகுதியில் உள்ள அனைத்து வீடுகளிலும் தனிநபர் இல்ல கழிப்பறை மற்றும் தண்ணீர் வசதி உள்ளது. இந்நகராட்சி பகுதியில் தினசரி சேகரிக்கப்படும் குப்பைகள் மொத்த எடை38.35 மெட்ரிக் டன் ஆக உள்ளது. சேகரிக்கப்படும் குப்பைகள் மக்கும் மற்றும் மக்காத குப்பைகள் என தரம் பிரிக்கப்பட்டு, மக்கும் குப்பைகளில் இயற்கையான முறையில் உரம் தயாரிக்கப்படுகிறது. மக்காத குப்பைகளை தனியார் நிறுவனத்திற்கு மறுசுழற்சிக்கு அனுப்பப்படுகிறது.

பொதுமக்கள் அறியும் வண்ணம் சுகாதாரம் சம்மந்தமான தகவல்கள், தொடர்பு பணிகள் அவ்வப்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அறிக்கையாண்டில் பிறப்புகளும், இறப்புகளும் பதிவு செய்யப்பட்டது.

## கொள்ளை நோய் விவரங்கள்

அறிக்கை ஆண்டில் கொள்ளை நோய் தொடர்பான விவர அறிக்கை

| வ.எண். | நோயின் பெயர் | பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | காலரா | இல்லை |
| 2 | அம்மை | |
| 3 | பிளேக் | |
| 4 | சீதபேதி | |
| 5 | வயிற்றுக் கடுப்பு | |
| 6 | சுவாசப்பை சம்மந்தமான நோய் | |
| 7 | இன்ஃப்ளுன்சா மற்றும் நாய்கடி | |
| 8 | கொரோனா வைரஸ் | |

## துப்புரவு பணிகள்

பொது சுகாதாரப் பிரிவு நகராட்சி மற்றும் தனியார் வெளிக்கொணர்வு துப்புரவு பணியாளர்களால் நகரில் உள்ள குப்பைகள் தினசரி அகற்றப்பட்டு வருகிறது. அறிக்கையாண்டில், நகராட்சியின் 3 டிப்பர் லாரிகள். 16 சிறிய இலகுரக வாகனங்கள் மற்றும் 48 பேட்டரி வாகனங்கள், தனியார் வெளிக்கொணர்வு நிறுவனத்திடம் வாடகை அடிப்படையில் ஒப்படைக்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது. இது தவிர 4 டிராக்டர்கள், 4 சிறிய இலகுரக வாகனங்கள் தனியார் நிறுவனத்தால், துப்புரவு பணியில் ஈடுப்படுத்தப்பட்டு வரப்படுகிறது.

வார்டு எண்.1 முதல் 18 வரை உள்ள வார்டுகளை தனியார் மூலமும் மற்றும் நகராட்சி துப்புரவு பணியாளர்களை கொண்டும் துப்புரவு பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. திருவேற்காடு நகராட்சியில் வீடு வீடாகச் சென்று சேகரிக்கப்படும் மக்கும் குப்பைகள், 7 பசுமை உரக்குடில்கள் (Micro compost Centre), 10 பூங்கா உரக்குடில்கள் அமைக்கப்பட்டு அங்கு, இயற்கை முறையில் உரம் தயாரிக்கப்பட்டு வருகிறது. மக்காத குப்பைகள் தனியார் நிறுவனத்திடம் மறுசுழற்சிக்கு அனுப்பப்படுகிறது.

உணவு கலப்பட தடுப்பு சட்டம்

2023–2024ம் ஆண்டு, உணவு பாதுகாப்பு சட்டம் அமுலில் உள்ளதால் மேற்படி பணிகள், உணவு பாதுகாப்பு துறையினரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது,

வருவாய் பிரிவு வருவாயினம்

2023–2024 நிதியாண்டில், சொத்துவரி, காலிமனை வரி, தொழில்வரி மற்றும் வரியில்லா இனங்கள் வசூலிக்கப்பட்ட விவரம் கீழ்கண்டுள்ளவாறு உள்ளது.

சொத்து வரி:

| கேட்பு தொகை (இலட்சத்தில்) | வசூல் | நிலுவை |
|---|---|---|
| 1870.60 | 1605.42 | 265.17 |

சொத்து வரி விதிப்புகள் 2022 – 23-ல் 26575 வரி விதிப்புகள் இருந்தன. தற்போது 2023–2024ல் 26738 என வரி விதிப்புகள் விதிக்கப்பட்டு கேட்பு உயர்வு செய்யப்பட்டுள்ளது.

காலிமனை வரி:

| கேட்பு தொகை (இலட்சத்தில்) | வசூல் | நிலுவை |
|---|---|---|
| 305.50 | 168.33 | 137.17 |

காலிமனை வரி விதிப்புகள் 2022 – 23-ல் 5561 வரி விதிப்புகள் இருந்தன. தற்போது 2023–2024ல் 5311 என வரி விதிப்புகள் விதிக்கப்பட்டு கேட்பு உயர்வு செய்யப்பட்டுள்ளது.

தொழில் வரி:

| கேட்பு தொகை (இலட்சத்தில்) | வசூல் | நிலுவை |
|---|---|---|
| 325.08 | 301.05 | 24.03 |

தொழில் வரி விதிப்புகள் 2022 – 23-ல் 1479 வரி விதிப்புகள் இருந்தன. தற்போது 2023–2024 புதியதாக வரி விதிப்புகள் விதிக்கப்பட்டு கேட்பு உயர்வு செய்யப்பட்டுள்ளது.

**வரியில்லா இனங்கள்:**

ஏதுமில்லை.

<u>நகரமைப்பு</u>

இந்நகராட்சியில் முதுநிலை நகரமைப்பு அலுவலர் பணியிடம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. மூன்று நகரமைப்பு ஆய்வர் பணியிடத்தில் இரண்டு நகரமைப்பு ஆய்வாளர் மட்டும் பணிபுரிந்து வருகிறார். மேலும், நகர்மன்ற தீர்மானம் எண்.36 நாள் 26.06.2016ன் படி 01.08.2016 முதல் கட்டிட உரிமையாணை கட்டணம் உயர்த்தி வசூலிக்கப்பட்டு வருகிறது. இந்நகராட்சி பகுதியில் கட்டப்படும் கட்டுமானங்கள் முறையாக கட்டிட அங்கீகாரம் பெறப்பட்டு கட்டப்பட்டு வருகின்றன. கட்டிட அனுமதி பெறாமல் கட்டப்படும் கட்டுமானங்கள் உடனுக்குடன் கண்டறியப்பட்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920–ன்கீழ் அறிவிப்பு வழங்கப்பட்டு அங்கீகாரம் பெற ஆவன செய்யப்படுகிறது. அங்கீகாரம் பெறாமல் கட்டிடம் கட்டுபவர்கள் மீது சட்ட ரீதியாக நிர்வாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. அறிக்கையாண்டில் 379 எண்ணிக்கை கட்டிட விண்ணப்பங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் இவ்வறிக்கையாண்டில் வரன்முறைபடுத்து திட்டத்தின் கீழ் 71 கட்டிட மனை விண்ணப்பம் பெறப்பட்டு வரன்முறைப்படுத்தப்பட்டுள்ளது.

<u>தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார திட்டம் (NULM)</u>

இந்நகராட்சிக்கு அனுமதிக்கப்பட்ட சமுதாய அமைப்பாளர் பணியிடம் ஒன்று, மேற்படிபணியாளரை அயலிடைப் பணியாக NULM திட்டப் பணிகளை கவனிக்க தமிழ் நாடு மகளிர் மேம்பாட்டுத் திட்டத்திற்கு மாறுதல் செய்யப்பட்டுள்ளது.

மாண்புமிகு நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் அவர்களால் 2022–2023 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின்போது 07.04.2022 அன்று கீழ்காணும் அறிவிப்பு செய்யப்பட்டது.

**சாலைலையோர வியாபாரிகளுக்கானத் திட்டம் (Street Vendors Welfare)**

தகுதியான சாலையோரா வியாபாரிகளின் சமூக பாதுகாப்பு மற்றும் வாழ்வாதாரத்தை உறுதி செய்திட நடப்பாண்டில் புதிய கணக்கெடுப்பு நடத்தப்பட்டு, அடையாள அட்டை

வழங்கப்பட்டு அவர்கள் எவ்வித சிரமும் இன்றி வியாபாரம் செய்வதற்கு ஏற்ற சூழல் உருவாக்கப்படும்.

இதனைத் தொடர்ந்து, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை–28 அவர்களின் கடிதம் ந.க.எண்.20789/2021/UPA1, நாள்.16.06.2022–ல் தமிழ்நாடு சாலையோரா வியாபாரிகள் (வாழ்வாதாரத்தை பாதுகாத்தல் மற்றும் வியாபாரத்தினை ஒழுங்குப்படுத்துதல்) திட்டம் மற்றும் விதிகள் 2015–ன் படி சாலையோர வியாபாரிகள் கணக்கெடுப்பு செய்து, அவர்களுக்கு அடையாள அட்டை மற்றும் விற்பனைச் சான்று தயார் செய்து வழங்குதல் மற்றும் விற்பனைத் திட்டம் தயார் செய்தல் உள்ளிட்ட பணிகள் மேற்கொள் உரிய நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொண்டதைத் தொடர்ந்து, இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள சாலையோர வியாபாரிகளின் கணக்கெடுப்பு எடுக்கப்பட்டதில், மொத்தம் 908 நபர்கள் உள்ளனர் எனக் கண்டறிப்பட்டு , மேற்படி நபர்களுக்கு அடையாள அட்டை மற்றும் விற்பனைச் சான்றுகள் வழங்கப்பட்டுள்ளது.

ஆணையர்
திருவேற்காடு நகராட்சி.

26/6/2024